***Copy of Deposition***

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்**

**H.M.OP**. 4/2024

**பெயர்** - அருண்குமார் **நாள்**: *24 .01.2025*

**ம.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.**

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

எதிர் மனுதாரர் திருமணத்திற்கு முன்பே 12ம் வகுப்பு முடித்துவிட்டார் என்றால் சரியல்ல. பெயிலாகியிருந்தார். திருமணமாகி 2 வருடம் கழித்து தான் 12ம் வகுப்பு முடித்தார், எத்தனை பேப்பரில் பெயிலாகியிருந்தார் என்றும், அது என்ன பேப்பர் என்றால் என்ன பேப்பர் என்று ஞாபகம் இல்லை, அக்கவுண்ட்ஸ் பேப்பராக இருக்கும். B.A. டிகிரி எப்போது முடித்தார் என்றால் திருமணமாகி சுமார் 5 வருடத்திற்குள் முடித்தார். எனக்கு நிறைய சம்பவங்கள் நினைவிற்கு வருவதில்லை என்றால் திருமணமாகி 14 வருடங்கள் ஆகிவிட்டதால் சில சம்பவங்கள் நினைவுக்கு வருவதில்லை. எதிர் மனுதாரருக்காக படிப்பு செலவு அனைத்தையும், அவரது தகப்பனார்தான் செய்தார் என்றும், நான் எந்த செலவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரின் படிப்பிற்காக எந்தெந்த காலகட்டத்தில் எவ்வளவு செலவு செய்தேன் என்பதை காட்டுவதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் எந்த செலவும் செய்யாததால்தான் என்னிடம் ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. எனது குடும்பம் விவசாய குடும்பம் என்றால் சரிதான். என் அம்மா, அப்பாவிற்கு விவசாயம்தான் தொழில். எனது வீட்டிற்கும் விவசாய பூமிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும். விவசாயத்தை என் அப்பா, அம்மதான் பார்த்துக்கொண்டார்கள். என் அப்பா, அம்மா இருவருக்கும் தினசரி தோட்டத்தில் வேலை இருக்கும் என்றால் சரிதான். என் அப்பா, அம்மா தோட்டத்திற்கு போனபிறகு எதிர்

மனுதாரர்தான் வீட்டு வேலைகள் எல்லாம் செய்து எங்கள் மூன்று பேருக்கும் எல்லா பணிவிடைகளும் செய்து வந்தார் என்றால் அது உண்மையல்ல. நானும், எதிர் மனுதாரரும் வடுகனூரில் குடியிருந்தபோதுதான் முதல் முறையாக கர்ப்பமானார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக எதிர் மனுதாரரிடம் எத்தனை வருடம் பழகி வந்தேன் என்றால் சுமார் 1 வருடம் இருக்கும். எனது குடும்பத்திற்கும், எதிர் மனுதாரரின் தாய் மாமா குடும்பத்திற்கும் உள்ள பிரச்சனைக்கும், எதிர் மனுதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் திருமணத்திற்கு முன்பே எதிர் மனுதாரர் மாமா குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்து வந்ததாதா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்திற்கும், எதிர் மனுதாரரின் மாமா குடும்பத்திற்கும் இடையே உள்ள பிரச்சனையில் எதிர் மனுதாரருக்கும் தொடர்பு இருப்பதாக எதிர் மனுதாரருக்கு எதிராக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்திற்கும், எதிர் மனுதாரரின் மாமா குடும்பத்திற்கும் இடையே உள்ள பிரச்சனைக்கு எதிர் மனுதாரருக்கு சம்பந்தம் இல்லை என்பதால்தான்அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 21.10.2015 ம் தேதி அன்று என் மீதும், எனது பெற்றோர்கள் மீதும் வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தியதாக எதிர் மனுதாரர் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு ஏதாவது ஒருநாள் மலையம்பாளையம் காவல்நிலையம் சென்றுள்ளேனா என்றால் காவல்நிலையம் சென்றுள்ளேன் ஆனால் எந்த பிரச்சனைக்கு என்று ஞாபகம் இல்லை. காவல்நிலையத்தில் என்னுடைய கைப்பட எழுத்துமூலமாக எழுதிகொடுக்கப்பட்ட ஏதாவது ஒரு சங்கதி ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. எதிர் மனுதாரர் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு நான் எதிர் மனுதாரரை எந்த தொந்தரவும் செய்ய மாட்டேன் கைப்பட எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

காவல்துறையினர் செய்து வைத்த சமாதானத்திற்கு பிறகு தான் கடந்த 2019 ம் வருடம் எதிர் மனுதாரரை ஆயப்பரப்பிற்கு அழைத்து சென்றேன் என்றால் ஆயப்பரப்பிற்கு அழைத்து சென்றேன் எந்த வருடம் அழைத்து சென்றேன் ஞாபகம் இல்லை. நான் மத்திய அரசு பணியில் என்ன பணியில் உள்ளேன் என்றால் அஞ்சல் அதிகாரியாக உள்ளேன். எத்தனை வருடங்களாக இந்த பணியில் உள்ளேன் என்றால் 18 ஆண்டுகளாக பணியில் இருந்து வருகிறேன். என்னுடைய பணி மிகவும் நுட்பமான பணி என்றும் ஆனால் நான் எந்த நிகழ்வை பற்றி வினா எழுப்பினாலும் ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும், எதிர் மனுதாரரின் மாமாவுக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் யார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் என் அப்பா அரசு மருத்துவமனை, கொடுமுடியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது காவலர் என் அப்பாவிடம் புகார் வாக்குமூலம் வாங்கி சென்றார், அது எந்த தேதி என்றால் ஞாபகம் இல்லை, எந்த வருடம் என்றால் 2018 ஆக இருக்கலாம். அந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன். அந்த விசாரணையில் பிரச்சனைக்கு எதிர் மனுதாரர் ஒரு காரணம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் பெயரில் சொத்து எழுதி வைக்க வேண்டும் என்று எதிர் மாமா பிரச்சனை செய்ததாக சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எதிர் மனுதாரர் அவரது தாய் மாமா பேச்சைகேட்டுக்கொண்டு எங்கள் குடும்பத்தாரை தொந்தரவு செய்ததாக வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த ஒரு தாய் மாமாவும் தனது சகோதரியின் மகள் குடும்ப வாழ்க்கை வீணாக வேண்டும் என்று நினைக்கமாட்டார்கள் என்றால் அவர்களுக்கு குடும்ப வாழ்க்கையைவிட சொத்துதான் பெரிதாக தெரிந்தது. இதுநாள் வரையில் சொத்தில் பாகம் கேட்டு எதிர் மனுதாரர் தரப்பில் எங்கள் குடும்பத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனது வாழ்க்கையில் சொத்து சம்பந்தமாக எதிர் மனுதாரர் எந்த பிரச்சனையும் செய்யவில்லை

என்றும், அதனால்தான் சொத்து சம்பந்தமாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் தாய் மாமா மீது தாக்கல்செய்த குற்ற வழக்கு எப்போது முடிந்தது என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டாரா, விடுவிக்கப்பட்டாரா என்ற விவரம் ஞாபகம் உள்ளதா என்றால் தெரியாது. எதிர் மனுதாரர் கடந்த 2015ம் வருடம் முதல் 2018ம் வருடம் வரை அணைகவுண்டன் புதூரில்உள்ள அவரது பெற்றோர் வீட்டில்தான் இருந்து வந்தார் என்றால் உண்மையல்ல. எதிர் மனுதார் எந்தெந்த காலக்கட்டத்தில் எங்கெங்கு இருந்தார் என்ற விவரம் சொல்லமுடியுமா என்றால் நாள் கணக்கில் எனக்கு விவரம் தெரியாது. என் மீதும் என் குடும்பத்தினர் மீதும் எதிர் மனுதாரர் குடும்ப வன்கொடுமை புகார் எதாவது கொடுத்துள்ளாரா என்றால் கொடுப்பதாக மிரட்டினார். குடும்ப வன்கொடுமை புகார் கொடுப்பதாக எதிர் மனுதாரர் மிரட்டியதாக என்னுடைய மனுவில் எதாவது ஒரு இடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இதுவரை அந்த மாதிரியாக புகார் எதுவும் இல்லை என்றால் அப்படி ஒன்றும் தெரியவில்லை. எதிர் மனுதார் எப்போதும் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பதால்தான் என்னுடைய குடும்பத்தார்கள் செய்த சிறு சிறு கொடுமைகளை பொறுத்துக்கொண்டு எந்தவிதமான குடும்ப வன்முறை புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பணிபுரியும் அலுவலகத்தில் எதிர் மனுதாரரால் என் மீது எந்த விதமான துறைரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் விசாரணை மேற்கொண்டு என்மீது குற்றம் இல்லை என்பதால் என்மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எதிர் மனுதாரர் கொடுத்தபுகாரின் பேரில் துறைரீதியாக என் மீது விசாரணை மேற்கொண்டதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் உள்ளது. என்னுடன் பணிபுரிந்த 6 நபர்களின் பெயர்களை பற்றி வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றும், அதற்கு எதாவது தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. எதிர் மனுதார் எங்கள் அலுவலகத்திற்கு என்

பெயரில் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றும், யார் முன்னிலையிலும் எதிர் மனுதாரர் என்னை அவமானப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அடிக்கடி வரதட்சணை கேட்டு என் தாயார் எதிர் மனுதாரரை திட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் எதிர் மனுதாரரின் தந்தை ரூ.3,00,000/- கடன் வாங்கி என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அது பொய்யாகும். என் தாயாருக்கும், எதிர் மனுதாரருக்கும் ஒத்துபோகாததால்தான் நாங்கள் ஆயப்பரப்பிற்கு போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் குடும்பத்தில் உள்ள யாருக்கும் ஒத்துபோகாததால்தான் ஆயப்பரப்பிற்கு போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆயப்பரப்பில் நானும் எதிர் மனுதாரரும் குடும்பம் நடத்தினோம். அங்கு எத்தனை மாதம் குடும்பம் நடத்தினோம் என்றால் நினைவில் இல்லை. எதிர் மனுதாரருக்கும் எனக்கும் தனிப்பட்ட பிரச்சனை எதுவும் இல்லாததால்தான் எதிர் மனுதாரருடன் ஆயப்பரப்பிற்கு சென்று குடும்பம் நடத்தினோம் என்றால் சரியல்ல. ஆயப்பரப்பில் எனது பாட்டி வீட்டில் இருந்தசமயத்தில் என் தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு என் பாட்டியும் எதிர் மனுதாரரை கொடுமை செய்தார் என்றால் சரியல்ல. ஆயப்பரப்பில் எதிர் மனுதாரருடன் குடும்பம் நடத்தியபோது கர்ப்பம் அடைந்து அதை கலைப்பதற்காக ஈரோட்டில் உள்ள ஆதித்யா மருத்துவமனை மற்றும் குமாரசாமி மருத்துவமனை மற்றும் ஓம்சக்தி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளுக்கு கூட்டி சென்று அங்கு கரு நல்லமுறையில் வளர்ந்துள்ளதால் கருக்கலைப்பு செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்றால் கருக்கலைப்பிற்காக செல்லவில்லை, பரிசோதனைக்குதான் சென்றோம். கருக்கலைப்பு சம்பவமானது எதிர் மனுதாரருக்கு தெரியாமல் கூட்டிபோனதால் மருத்துவமனையிலேயே பிரச்சனை ஏற்பட்டது என்றால் உண்மையில்லை. நான் என் எனது தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு அடிக்கடி எதிர் மனுதாரருடன் சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரருக்கும் எனக்கும் நேரடி பிரச்சனை எதுவும் இல்லாததாலும், நாங்கள் மனமொத்த தம்பதிகளாக

இருந்ததால்தான் எங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2 வது குழந்தை பிறந்தபிறகும் எதிர் மனுதாரரை ஆயப்பரப்பிற்கு அழைத்துச்சென்றேனா என்றால் ஞாபகம் இல்லை. எதிர் மனுதாரருக்கும் எனது தாயாருக்கும் ஏற்பட்ட சண்டையில் எதிர் மனுதாரரரை வீட்டை விட்டு வெளியே தள்ளி கதவை சாத்திவிட்டேன் என்றால் சரியல்ல. 2 வது குழந்தை எந்த தேதியில் பிறந்தது என்றால் 21.10.2020 ம் தேதி அன்று பிறந்தது. அந்த குழந்தை எந்த மருத்துவமனையில் பிறந்தது என்றால் ஓம்சக்தி மருத்துவமனையில் பிறந்தது. குழந்தை பேறுக்காக பெற்றோர் வீட்டிற்கு சென்ற எதிர் மனுதாரரை எங்கள் குடும்பத்தினர் அழைத்து செல்ல எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் அழைத்தோம் எதிர் மனுதாரர் வரவில்லை.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sd xxx M.Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |